Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10


# ஈழநாடு

மலர் 7 EELA NADU இதழ் 183

National Tamil Daily தேசிய தினசரி

(14-8-65)

விசுவாவசு ஆடி 30 ரபி அகிர் பிறை 16 சனிக்கிழமை




## இக்கேடா காலமானர்

டோக்கியோ, ஆக. 13

முன்னாள் ஜப்பானிய பிரதமர் திரு. இக்கேடா தனது 65 வது வயதில் இன்று காலமானர். 65 வயதான திரு. இக்கேடா இறப்பதற்கு முன் சிகிச்சை பெற்று வந்தார். திரு இக்கேடா 4 வருடம் ஜப்பானியப் பிரதமராக கடமையாற்றினர்.

மண்டியில்

# பாக். ஊடுருவல்காரர்கள் முற்ருக பிடிபட்டனர்

## விரைவில் அனைவரு பிடிபட்டு விடுவார்கள் என அறிவிப்பு

### சாம்பகுதியில் தொடர்ந்து சண்டை

ஸ்ரீநகர், ஆக. 13

காஷ்மீரிலுள்ள பூஞ்ச்ஜில்லாவில் மண்டி நகரிலுள்ள பாகிஸ்தானி ஊடுருவல் காரர் அனைவரும் பிடிக்கப்பட்டு விட்டார்கள் என அறிவிக்கப்படுகிறது. இன்று காலை அங்கு நடைபெற்ற கைகலப்பின் விளைவாக அனைவரும் இந்திய பாதுகாப்புப் படையினரால் பிடிக்கப்பட்டுவிட்டனர்.

சாம்பகுதியில் தொடர்ந்து சண்டை நடைபெற்று வருகிறது. ஸ்ரீநகரில் வாழ்க்கை நிலை மாமூலாக இருப்பதாயும் அறிவிக்கப்பட்டது.

ஊடுருவல்காரர்கள் நிச்சயமாக விரைவில் பிடிக்கப்பட்டு விடுவார்கள் என இந்திய ராணுவ அதிகாரி ஒருவர் அறிவித்தார். ஸ்ரீநகர்—லேசாலை துண்டிக்கப்பட்டதாக பாகிஸ்தான் கூறிய விஷயத்தையும் அவர் மறுத்தார்.

## பல்கலைக் கழக விஷயத்தில் பாரபட்சம் ஏன்?

### இடதுசாரி பிரமுகர் கண்டனம்

யாழ்ப்பாணம், வெள்ளி

காலியில் பல்கலைக்கழகத்தின் ஓர் பிரிவை ஸ்தாபிப்பதற்கு 50 ஏக்கர் நிலம் வாங்கி கட்டிடம் நிறுவும் இந்த அரசாங்கம் யாழ்ப்பாணத்தில் மட்டும் ஒரு பெரிய கல்லூரியை மூடி அதையே யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்போகும் பல்கலைக் கழகப் பிரிவிற்கு உபயோகிக்கப்போகின்றது என்று இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ் பிரதேசக்காரியதரிசி திரு. ஐ ஆர் அரியரத்தினம் கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ் மாவட்டக் கமிட்டிக்கூட்டத்தில் பேசும்பொழுது குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

இந்நாட்டில் வதியும் சகல சமூகங்களுடனும் நியாயமான முறையில் நடந்துகொள்வதாகக் கூறிக்கொள்ளும் இவ்வரசாங்கம் வருகிற டிசம்பர்மாதத்தில் பொது தராதரப் பத்திர பரீட்சைக்கும், மற்றும் பரீட்சைகளுக்கும் தோற்றவிருக்கும் மேற்படி கல்லூரியில் கல்வி பயிலும் ஏராளமான மாணவர்களின் கஷ்டத்தை இத்தீர்மானத்தை எடுக்குமுன் சிறிதேனும் சிந்திக்கவில்லை. முன்னைய அரசாங்கம் வடபகுதியில் சகல வசதிகளையும் கொண்ட ஓர் பல்கலைக் கழகத்தை நிறுவ தீர்மானித்திருந்தது. கல்வித்துறையில் அபிவிருத்தியடைந்த யாழ்ப்பாணம் போன்ற பிரதேசத்திற்கு சகல வசதிகளும் கொண்ட ஒரு முதல்தரமான பல்கலைக்கழகம் தேவை. தற்போதைய அரசாங்கத்தின் திட்டம் இந்தக் கோரிக்கையின் அவசியத்தைக் குறைக்கின்றது. யாழ்ப்பாணத்தில் பல்கலைக் கழகத்தின் பிரிவு நிறுவுவதாயிருந்தாலும் அதற்குரிய நிலத்தை எடுத்து புதிய கட்டிடம் நிறுவியபின்னரே அதை ஆரம்பிக்கவேண்டும். மேற்படி கல்லூரியை மூடாமல் பல்கலைக் கழகப் பிரிவிற்கு நிலம் எடுத்துப் புதியகட்டிடம் போடும்வரையில் தற்காலிகமாக அதை நடத்துவதற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்வது அரசாங்கத்தின் சக்திக்கு அப்பாற்பட்டதல்ல.

## தேசிய சுவீப் முடிவுகள்

பம்பலப்பிட்டி, வெள்ளி

நேற்று இழுக்கப்பட்ட தேசிய சுவீப் முடிவுகள்.

1-வது பரிசு
05 P 0497 — ரு 82,450

2-வது
08 P 0795 — ரு. 12,980

3-வது பரிசு
01 H 0363 — ரு 8,245

(2-ம் பக்கம் பார்க்க)

## "புலவர்கள் பண்டிதர்களின் பிரச்னை மிக முக்கியமானது"

—உடுப்பிட்டி எம். பி.

உடுப்பிட்டி, வெள்ளி

"வேலையில்லாத் திண்டாட்டம் கோரத் தாண்டவமாடும் இன்றைய நிலையில் அண்ணாமலை பல்கலைக்கழகத்திலும் தனிப்பட்ட ஸ்தாபனங்களிலும் பயின்ற தமிழ்ப் புலவர்கள் பண்டிதர்களின் பிரச்னை முக்கியமாகவுள்ளது. கடந்த காலவரை அண்மைக்காலமாக இவர்களின் ஆசிரிய நியமனங்களுக்காக முயற்சி செய்து வருகிறேன்" என்று உடுப்பிட்டி எம். பி. திரு. மு சிவசிதம்பரம் கரவெட்டி சரஸ்வதி மகளிர் வித்தியாலய மண்டபத்தில் வாணி கலைக்கழக சார்பில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

செல்வன் கிருஷ்ணசாமி தலைமை வகித்த இக்கூட்டத்தில் திரு மு சிவசிதம்பரம் தொடர்ந்து பேசியதாவது:

பண்டிதர், புலவர் பரீட்சைகளில் சித்தியெய்தியவர்களை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் சேருவதற்கு அனுமதிக்கும்படி முயற்சி செய்யவேண்டும். வேலையற்ற தமிழ் இந்தியப் பட்டதாரிகள் கூடத் தமக்கு ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் இடம் கொடுத்தால் போதும் என்ற நிலையில் உள்ளார்கள் வித்தியாபகுதியைப் பொறுத்தவரையில் தேசிய அரசாங்கத்தினால் எவ்வித நன்மையும் ஏற்படப் போவதில்லை ஏனெனில் முன்னைய அரசாங்கத்தில் கல்விப்பகுதியிலிருந்து அதிகாரம் செய்த உத்தியோகத்தர்களே இப்பொழுதும் கூடுதலான அதிகாரங்களுடன் இருக்கிறார்கள் என்ன இருந்தாலும் தமிழை படித்தவர்கள் என்ற பெருமை பண்டிதர், புலவர்களுக்கு உண்டு இவர்களின் வாழ்க்கைத்தரம் உயர்வதற்காக நான் என்னாலியன்றவரைப் பாடுபடுவேன்.

## 'காயம் சிறிதானபடியால் பொலிசாருக்குக் கூறவில்லை'

### மரண விசாரணையில் மனைவி சாட்சியம்

காங்கேசன்துறை, வெள்ளி

பொன்னாலை கிருஷ்ணன் கோவிலடியைச் சேர்ந்த இராமன் சின்னத்தம்பியின் மரணம் சம்பந்தமாக மரணவிசாரணை நடத்திய மல்லாகம் நீதிபதி, ஆழ்வான் நாகன் என்பவரை கைது செய்யுமாறு வாரண் பிறப்பிக்கு உத்தரவிட்டார்.

காலஞ்சென்றவரின் மனைவி சின்னடபொன்னை (வயது 20) சாட்சியமளித்தபோது கூறியதாவது:-

இம்மாதம் 4ம் தேதி 4 மணியளவில் நானும் எனது குழந்தைகள் பாலனுடன், ஆசைக்கிளி ஆகியோரும் வீட்டில் இருந்தோம். எனது கணவன் வேலையிலிருந்து மாலை 4 மணிவரை வீட்டிற்கு வரவில்லை சிறிது நேரத்தின்பின் ஐயோ என்ற சத்தம் கேட்டு உடனே நான் வெளியில்வந்து பார்த்தபோது எனது கணவனின் தலையிலிருந்து இரத்தம் வடிய, ஒரு வேலியோடு சாய்ந்து நின்ருர் சிறிது தூரத்திற்கப்பால், ஆழ்வான நாகன் ஒரு பொல்லுடன் நின்று கொண்டிருப்பதைக் கண்டேன்

நான் அவரைப் பேசிவிட்டு எனது கணவரை வீட்டிற்கு அழைத்துவந்தேன் ஆனல் நான் இச்சம்பவம்பற்றி பொலிசாருக்குத் தெரிவிக்கவில்லை

பொலிசாருக்கு ஏன் அறிவிக்கவில்லை என நீதிபதி கேட்டபொழுது, காயம் சிறியதாக இருந்தபடியாலும், கணவன் மது அருந்தியிருந்தபடியால், விழுந்து காயமேற்பட்டிருக்கலாமென எண்ணியதாலும் அறிவிக்கவில்லையென்று காலஞ் சென்றவரின் மனைவி கூறினர்.

மறுநாள் காலை 4 மணிக்கு அயலவர்கள் தனது கணவனை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசென்றனர் என்று அவர் கூறியபொழுது, சங்கானைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் சமீம் குறுக்கிட்டு, ஆஸ்பத்திரியில் காலை 10-50 மணிக்குத்தான் அனுமதிக்கப்பட்டிருப்பதாக நீதிபதியின் கவனத்திற்குக் கொண்டுவந்தார்.

காலஞ்சென்றவரின் மனைவி தொடர்ந்து சாட்சியமளிக்கும்போது, தனது கணவனுக்கும், ஆழ்வான் நாகனுக்கும் எவ்வித மனஸ்தாபமும் இல்லையென்றும் கூறினர். காலஞ்சென்றவரின் சகோதரர் இராமலிங்கம் ஐயம்பிள்ளையும் சாட்சியமளித்தார்.

நீதிபதி, ஆழ்வான் நாகனைக் கைதுசெய்ய உத்தரவிட்டார்.

## பொலிஸ் சூட்டுக்கு 4 பேர் பலி

பாட்னு ஆக. 13

பீகாரில் சில இடங்களில் ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகத்தின் விளைவாக 4 பேர் கொல்லப்பட்டனர்.

## நாஸர் யூகோ. செல்வார்

கெய்ரோ, ஆக. 13

ஜனாதிபதி நாஸர் அடுத்த மாதம் யூகோஸ்லேவியாவுக்கு விஜயம் செய்வார் என அறிவிக்கப்பட்டது.

உங்கள் கட்டிடங்கள் உறுதியாக இருப்பதற்கு

திறமான

★ இரும்புச் சாமான்களும்
★ பெயின்டுவகைகளும்
★ அஸ்பஸ் சீட்டுகளும்
★ மர வகைகளும்

எம்மிடம்

பெற்றுக்கொள்ளலாம்.

விஷ்ணு

ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்

வல்வெட்டித்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

யாதும் ஊரே, யாவரும் கேளிர் தீதும் நன்றும் பிறர்தர வாரா.

— கணியன் பூங்குன்றனர்

ஈழநாடு

EELA NADU National Tamil Daily. Post Box 49. Jaffna. Grams: "EELANADU" Jaffana Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு ஆடி 30 ௳ (14-8-65)

## இரு சபைகள்

உணவு உற்பத்தியைப் பெருக்கவும் வாழ்க்கைச் செலவைக் குறைக்கவும் நாடு முழுவதிலும் பொதுமக்களையும் அரசாங்க அதிகாரிகளையும் கொண்ட குழுக்களை அமைப்பது என்று உள்நாட்டு அமைச்சர் கூட்டிய அரசாங்க அதிபர்களின் மகாநாட்டில் தீர்மானிக்கப் பட்டுள்ளது இந்த நல்ல தீர்மானம் உடனடியாகச் செயல்படுத்தப்பட வேண்டும்.

உள்ளூர் உற்பத்திப் பொருள்களுக்கு விலை நிர்ணயிக்கப் பட வேண்டுமென ஒரு குழு சமீபத்தில் அரசாங்கத்துக்குச் சிபார்சு செய்திருந்தது பற்றி நாம் இப் பத்தியில் அபிப்பிராயம் தெரிவிக்கையில் விலை நிர்ணயிக்கப்பட்டாலும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டாலும் எவ்வித பயனும் ஏற்படாதென்றும் அதை அமுல் நடத்துவதில் தான் எல்லாம் தங்கியுள்ளதென்றும் குறிப்பிட்டிருந்தோம்.

உற்பத்தியைப் பெருக்குவதற்கும் வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கும் நிதி மந்திரியின் வரவு—செலவுத்திட்டம் ஓரளவு வழிவகுத்துள்ளது. ஆனால் நிதி மந்திரி அளித்த சலுகைகளையும் உரிமைகளையும் தொழில் அதிபர்களும் வர்த்தகர்களும் தமது சொந்த நோக்கத்துக்குப் பயன்படுத்திக் கொள்ளை இலாபம் அடிக்கக் கூடும். இதனால் பொது மக்கள் எவ்வித பயனும் அடைய முடியாமல் போவதுடன் அரசாங்கத்தினதும் நிதி மந்திரியினதும் நோக்கமே வீணாகிவிடும். இந்நிலையில் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கும் வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கும் நாடு முழுவதிலும் காரியாதிகாரிகள் பிரிவு ஒவ்வொன்றிலும் பொதுமக்களையும் அதிகாரிகளையும் கொண்ட சபைகள் நியமிக்கப்பட விருப்பது வரவேற்கத் தக்கதாகும். அரசாங்கம் செய்யும் தீர்மானங்கள் நல்லதாக இருப்பினும் அதைச் செயல்படுத்துவதில் அரசாங்க ஊழியர்கள் சரியாக நடந்துகொள்வதில்லையென்றும் லஞ்ச ஊழல்களில் அவர்கள் ஈடுபட்டுவிடுகிறார்களென்றும் பொதுவாக பொதுமக்கள் மத்தியில் புகார் கூறப்படுவதுண்டு. இதில் ஓரளவு உண்மையுமுண்டு. இப்புகாருக்கும் அரசாங்கத்தின் நல்ல நோக்கங்களைச் செயல்படுத்துவதற்கு இடையூறு இல்லாமலிருப்பதற்கும் பொதுமக்களும் அங்கம் வகிக்கக்கூடிய சபைகளை அமைப்பது விவேகமான செயலாகும். நிதி மந்திரி தமது வரவு—செலவு திட்டத்தின் மூலம் வாழ்க்கைச் செலவைக் குறைக்கவும் உணவு உற்பத்தியைப் பெருக்கவும் தூண்டுதல் அளித்திருக்கிறார். அதைச் சரியான முறையில் செயல்படுத்தி அவரது நோக்கத்தை நிறைவேற்றுவது இதர அமைச்சர்களினதும் பொதுமக்களினதும் கடமையாகும். இந்தவகையில் உள்நாட்டு அமைச்சர் அரசாங்க அதிபர்களைக் கூட்டி நல்ல முடிவைச் செய்திருக்கிறார். இனி இதற்கு ஒத்துழைப்பும் ஆதரவும் அளித்து வாழ்க்கைச் செலவைக் குறைக்கவும் உணவு உற்பத்தியைப் பெருக்கவும் உதவி அளிக்க வேண்டியது பொதுமக்களின் கடமை.

# 'தென்னாட்டுக் காந்தி' என். எம். ஆர். சுப்பராமன்

## இன்று சஷ்டி அப்தப் பூர்த்தி விழா

சாந்தி நிறைந்த முகம், பண்பும், அன்பும் ததும்பிய அகம், ஈவும் இரக்கமும் நிறைந்த இதயம், மணிபோன்ற இனிய சொல் வெள்ளை வெளேரென்ற தூய கதராடை இவைதான் "தென்னாட்டு காந்தி"யான மதுரை, திரு என். எம். ஆர். சுப்பராமன்.

காந்தியின் வழி நின்று அவரைப் போன்று பல பண்புகள் நிரம்பப்பெற்றவராதலின் இவரை, 'தென்னாட்டு காந்தி'என மக்கள் எல்லோரும் போற்றுகின்றனர்.

திரு. என். எம். ஆர் சுப்பராமன், மதுரை மாநகரத்தில் சௌராஷ்டிரா வகுப்பில் புகழ் பெற்ற தனவந்தராகிய திரு. என் எம் ராயலு ஐயருக்கும் புண்ணியவதி காவேரியம்மாளுக்கும் 1905-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14-ம் திகதி பிறந்த திருக்குமாரராவார். அந்தக் காலத்தில் அவ்வளவு பெரிய செல்வமும், சீரும், சிறப்பும் படைத்த ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர், விடுதலை போராட்டத்தில் ஈடுபட்டுச்சிறைத்தண்டனையும், மற்ற கஷ்டங்களும் அனுபவிப்பது அருமையிலும் அருமை இவர் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டது மட்டுமல்லாமல் விடுதலை போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் குடும்பங்களுக்கும் இவருடைய குடும்பத்தினர் உதவிசெய்தனர் இவருடைய மனைவியாராகிய திருமதி பர்வதவர்த்தனி அம்மையாரும் விடுதலைப் போராட்டத்தில் பங்குகொண்டு, சிறைவாசத்தை ஏற்று இருக்கிறார்கள்.

மதுரையில் பழம் பெரும் தேசபக்தர்களில் இவர் முதன்மையானவராகத் திகழ்கிறார். அந்தக் காலத்தில், காலஞ்சென்ற திரு அ. வைத்தியநாதையரும் இவரும், மதுரையில் இரு கண்கள் போல் இருந்து விடுதலைப் போராட்டத்திற்கும் காந்திய நிர்மாணத் திட்டங்களுக்கும், குறிப்பாகத் தீண்டாமை ஒழிப்புக்கும் செய்த சேவை என்றும் யாரும் மறக்க முடியாததொன்றாகும். அது அகிலத்திந்தியாவின் புகழுக்கும் பாராட்டுதலுக்கும் உரித்தாயிற்று.

சாந்திஜி வாழ்க்கையில் நடைபெற்றது போன்ற சோதனை இவருடைய வாழ்க்கையிலும் இளம் வயதில் ஏற்பட்டது. கலாசாலையில் சிறந்த மாணவர்களில் ஒருவராகத் திகழ்ந்த திரு சுப்பராமனை, மேல்படிப்புக்கு மேல் நாட்டிற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்பது அவருடைய அண்ணன் காலஞ்சென்ற திரு. வெங்கடகிருஷ்ணய்யருடைய பேரவா. இதற்கான ஏற்பாடுகளை எல்லாம் அவர் செய்து முடித்துவிட்டார். பாஸ்போர்ட்டும் வாங்கியாகிவிட்டது இந்த நிலையில், தமது அருமைத் திருமகனை மேல்நாட்டிற்கு அனுப்ப அன்னைக்கு மனமில்லை திரு சுப்பராமன் உள்ளத்திலும் இருந்த தேசிய உணர்வு, அவர் மேல்நாட்டிற்குச் செல்ல அனுமதிக்கவில்லை காந்தியடிகளின் சொற்பொழிவுகளும், நாட்டில் நடைபெற்றுக்கொண்டிருந்த, சுதந்திர இயக்கமும் அவர் மனதைக் கவர்ந்தன "நாடு அடிமையாக இருக்கும்போது மேல் நாட்டுக்குச் சென்று பட்டம் பெறுவதாவது!" இவ்வாறு, அவர் மனம் எண்ணியது கடைசியில் எப்படியோ அவருடைய மேல்நாட்டுப் பயணம் நின்றது.

இன்றுகூடத் திரு சுப்பராமன் தான் மேல்நாடு போகாததற்காக மகிழ்ச்சியே அடைகிறார் "நான் மேல்நாடு போயிருந்தால், தாய் நாட்டின் விடுதலைக்காகப் பாடுபடக்கூடிய பெரும்பேறு கிடைத்திருக்குமோ என்னவோ? என்னுடைய வாழ்க்கையே எப்படி மாறியிருக்குமோ! தெய்வத்திருவருள் தான் என்னைக் காப்பாற்றியது" என்று அவர் கூறுகிறார்.

திரு சுப்பராமன் கலாசாலை இறுதியாண்டு படித்துக் கொண்டு இருக்கும்போதே, மகாத்மாஜியின் பேச்சுக்களும் கருத்துக்களும் அவருடைய மனதைக் கவர்ந்தன 1921-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் காந்திஜி மதுரை வந்திருந்த போது அவரை நேரில் சந்திக்கக் கிடைத்த வாய்ப்பு முற்றிலும் அவரைக் கவர்ந்துவிட்டது அன்றிலிருந்தே, விலையுயர்ந்த அன்னிய ஆடைகளை நீக்கி கதர் ஆடை அணியத் தொடங்கினார் தேசிய மொழியான "இந்தி"யையும் கற்றுக் கொண்டார் காங்கிரஸ தலைவர்களுடன் அடிக்கடி தொடர்பு கொண்டார்; காங்கிரஸ் கமிட்டிகளில் அங்கம்வகிக்கத் தொடங்கினார். சிறிது காலம் சாந்தி நிகேதன் விஸ்வ பாரதியில் படித்தார். ஆனால், குடும்பத்தினர் நிர்ப்பந்தம் காரணமாகத்தொடர்ந்து படிக்க முடியவில்லை

அன்னாரின் மனம் சொந்தத் தொழில், வியாபாரம் முதலியவற்றில் செல்லுவதற்குப் பதிலாகத் தேசிய விஷயங்களில் நாட்டம் கொண்டது.

1930-ம் ஆண்டு காந்திஜி ஆரம்பித்த சத்தியாக்கிரகத்திலும், பின்னர், 1932-ல் நடந்த 'சட்டமறுப்பு இயக்கத்திலும்' பங்கு கொண்டதுடன், இருமுறை, தன் மனைவியுடன் சிறை சென்றார். ஆனால், உடல் நலக்குறைவால் 15 மாதங்கள் கழித்து விடுதலை செய்யப்பட்டார்.

1940-41 ல் தனி நபர் சத்தியாக்கிரகமும், நேரடி இயக்கமும் தொடங்கியபோது, அப்போதைய ஆட்சி, நகரசபையையும், அதன் தலைவரான திரு. ந. ம. ரா. சுப்பராமன் பேரிலும் கடுஞ்சினங்கொண்டு, நகரசபையைக் கலைத்துத் தலைவரையும், காவல் கைதியாகச் சிறைவைத்தது.

அரிஜனங்களின் முன்னேற்றத்திற்காக அவர் ஆற்றிய பணி அரசியல் பணியைவிட மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். அரிஜன நிதி திரட்டும் நிமித்தம் காந்தியடிகள் மதுரை வந்திருந்தபோது, மூன்று நாட்கள் திரு. சுப்பராமன் அவர்கள் வீட்டில் தங்கினார்.

கதர், ஆதாரக் கல்வி, கிராம முன்னேற்றம், சுகாதாரம், அரிஜனசேவை ஆகிய நிர்மாணப் பணிகளில் திரு. சுப்பராமன் பெரும் பங்கு எடுத்துக்கொண்டார். இன்று கூட அவர், தமிழ் நாடு அரிஜன சேவா சங்கத் தலைவராகவும், தமிழ் நாடு ஆதாரக் [illegible] மனப்பூர்வமாகப் பல ஸ்தாபனங்களுடன் அன்றாடம் நெருங்கிய தொடர்பு குறிப்பிடத்தக்கது. கடவுள் பக்தியும், ஆன்மீகத்தில் பெரும் நாட்டமும் கொண்ட திரு. சுப்பராமனுக்கு, மதுரை மாநகரின் பல்வேறு ஆன்மீக ஸ்தாபனங்களுடன் தொடர்புண்டு.

விநோபாஜியின் பூதான இயக்கம் ஆரம்பமான காலத்தில் சொந்த தன் உடமையிலிருந்து பாதிக்கு மேற்பட்ட நிலத்தை, 55 ஏக்கர் நஞ்சை நிலத்தை தானம் கொடுத்தார். தானம் கொடுக்கும்போதே இதன் விலை ரூ 60,000 ஆகும். தாம் மட்டும் தானம் கொடுத்ததுடன் நிற்காமல் தமது சகோதரர்கள் இருவரையும் முறையே 60 ஏக்கர் புஞ்சையையும், 11 ஏக்கர் நஞ்சையையும் தானம் கொடுக்கத் தூண்டினார். மாவட்டத்தில் பல பாகங்களுக்கும், விநோபாஜியின் பூதானச் செய்தியை எடுத்துச் சென்று நில தானங்களும் பெற்றுள்ளார்.

1937, 47 ல் நடைபெற்ற பொதுத் தேர்தல்களில் இரு முறை மதுரை நகரின் சார்பில், சட்டசபைப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பின்னர், சிறிதுகாலம் அரசியலிலிருந்து அநேகமாகவிலகி நிர்மாணப் பணிகளிலும், சொந்த வேலைகளிலும் ஈடுபட்டிருந்த திரு. சுப்பராமன் நண்பர்களின் வற்புறுத்தலின் பேரில், 1962 ம் ஆண்டு பொதுத் தேர்தலில் பாராளுமன்ற மதுரைத்தொகுதிக்கு அபேட்சகராக நிறுத்தப்பட்டு, அமோக வெற்றி அடைந்தார்.

திரு. சுப்பராமன் அவர்கள் சுதந்திரா, காந்தி நினைவு நிதியில் முக்கிய பொறுப்புடைத்து மதுரை மாவட்டத்தில், பெருந் தொகைகளை நன்கொடையாக சேர்த்துக் கொடுத்ததுடன், எட்டு ஆண்டுகளுக்கு காந்தி நிதியின் தமிழ் நாட்டுக் கிளையின் செயலாளராகப் பணியாற்றியுள்ளார்.

தமிழ் மக்களுக்குத் திரு சுப்பராமன் அவர்கள்மீது ஒரு தனி அபிமானம் இருக்கிறது, குறிப்பாக அரிஜனங்கள் அவரை தங்கள் "தந்தை"யாக கருதுகின்றனர்.

தற்போதுள்ள கஷ்டங்கள் நீங்கி, நாடு முன்னேற வேண்டுமானால் ஒவ்வொருவரும் அவரவர் கடமையைச் செய்ய வேண்டும் என்பது திரு. சுப்பராமனின் கருத்து. "நாட்டில் தன்னம்பிக்கை வளர வேண்டும், சுயதேவையைப் பூர்த்தியடையவேண்டும், சத்தியத்தையும், அன்பையும் கடைப்பிடிக்கவேண்டும், எல்லாத் துறைகளிலும் உள்ளவர்களிடையே நாட்டுப்பற்று வளர வேண்டும்" என்று அவர் கூறுகிறார்.

தமிழ் நாட்டில் காந்தியக் கொள்கைகளை நூற்றுக்கு நூறு பின்பற்றி நடக்கும் "காந்தி பக்தர்" யாராவது இருக்கிறார்களா என்றால், கண்களை மூடிக்கொண்டு, திரு. சுப்பராமன் அவர்களைக் கைகாட்டி விடலாம், அன்னாரது வாழ்க்கையில் காந்திஜியின் கொள்கைகளை வழுவாது நடத்திவரும் திரு. சுப்பராமன் அவர்களின் 60–வது பூர்த்திவிழா (சஷ்டி அப்தப்பூர்த்தி) இம்மாதம் 14-ம் திகதி நடைபெறுகிறது.

## நூலகபொறுப்பாளர் பயிற்சி

யாழ்ப்பாணம், வெள்ளி

வட்டுக்கோட்டைத் தொகுதி நூலகச் சங்கத்தினர் இலங்கை நூலக பொறுப்பாளர் பதவிக்காக வகுப்புகள் நடத்தவிருக்கின்றனர். இதற்கான விபரங்களை யாழ்ப்பாண பொது நூலகப் பொறுப்பாளரிடமிருந்து தெரிந்து கொள்ளலாமென அறிவிக்கப் பட்டுள்ளது.

## தேசிய சுவீப்

(1-ம் பக்க தொடர்ச்சி)

162 ரூபாய் 25 சதம் பெறும் 100 டிக்கட்டுகள் விபரம்:

| | | |
|---|---|---|
| 09 Y 0876 | 07 P 0791 | 02 J 0014 |
| 09 W 0800 | 03 Y 0483 | 12 P 0975 |
| 09 C 0769 | 09 J 0381 | 07 P 0122 |
| 03 G 0323 | 13 O 0825 | 13 Z 0351 |
| 03 L 0207 | 05 C 0203 | 06 O 0882 |
| 12 V 0774 | 03 W 0479 | 13 A 0658 |
| 09 T 0875 | 03 Y 0216 | 11 P 0279 |
| 02 F 0228 | 10 J 0130 | 03 O 0647 |
| 09 F 0045 | 09 Z 0833 | 10 G 0399 |
| 08 L 0535 | 06 M 0180 | 03 S 0811 |
| 13 D 0627 | 13 D 0502 | 05 O 0915 |
| 08 Q 0333 | 11 A 0674 | 11 X 0476 |
| 12 P 0921 | 01 P 0862 | 04 O 0137 |
| 05 X 0111 | 02 V 0626 | 02 L 0729 |
| 09 P 0871 | 02 A 0009 | 03 L 0867 |
| 01 P 0311 | 09 K 0962 | 06 X 0021 |
| 02 Z 0403 | 05 K 0526 | 06 Y 0238 |
| 10 X 0526 | 05 S 0811 | 03 H 0131 |
| 02 N 0660 | 06 L 0397 | 07 S 0955 |
| 11 S 0566 | 11 N 0500 | 12 U 0879 |
| 07 K 0306 | 12 R 0933 | 11 H 0435 |
| 06 L 0008 | 05 E 0022 | 01 S 0779 |
| 08 E 0614 | 08 V 0434 | 05 A 0020 |
| 11 V 0205 | 03 V 0076 | 01 H 0153 |
| 08 C 0983 | 06 U 0061 | 13 L 0350 |
| 02 Y 0937 | 04 K 0455 | 10 T 0096 |
| 10 G 0426 | 01 V 0297 | 07 P 0525 |
| 04 J 0962 | 11 L 0003 | 05 H 0683 |
| 10 Q 0686 | 11 E 0104 | 01 D 0153 |
| 02 M 0241 | 04 J 0861 | 04 Q 0085 |
| 01 G 0291 | 05 E 0344 | 04 Q 0312 |
| 09 X 0321 | 12 D 0543 | |
| 05 Y 0191 | 03 Q 0377 | |

## பிரயாணிகள் சங்கம் அங்குரார்ப்பணம்

நெடுந்தீவு, வெள்ளி

நெடுந்தீவுப் பிரயாணிகளின் கஷ்டங்களை நீக்கும் நோக்கத்துடன் சென்றவாரம் நெடுந்தீவு மேற்கு சைவப்பிரகாச வித்தியாசாலை மண்டபத்தில் பிரயாணிகள் சங்கம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. அங்குரார்ப்பணக் கூட்டத்திற்குத் தலைமைதாங்கிய திரு இரா சின்னத்தம்பி, நெடுந்தீவில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பஸ் சேவையின் கூடுதலான கட்டண விகிதத்தைக் குறைக்க ஆவன செய்யவேண்டுமென்று குறிப்பிட்டார். அடுத்துப் பேசிய திரு இ. வேலுப்பிள்ளை ஆசிரியர் பஸ் சேவையினதும் மோட்டார் வள்ளச் சேவையினதும் நேரசூசியில் மாற்றங்கள் செய்யப்படவேண்டும் எனக் குறிப்பிட்டார்,

இதன்பின் நடப்புவருடச் செயற்குழு அங்கத்தினராகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்:-

தலைவர்: திரு. ஆ. தாமோதரம்பிள்ளை, செயலாளர்: திரு. இரா சின்னத்தம்பி, பொருளாளர்: திரு. இ. பேரம்பலம், துணைத்தலைவர்: திரு. சி. வ. சங்கரப்பிள்ளை, துணைச் செயலாளர்: திரு. க. சிவநாயகமூர்த்தி, துணைப் பொருளாளர்: திரு. ந. பாலசிங்கம்.

செயற்குழு அங்கத்தினர் திருவாளர்கள்: அ. குமாரவேலு, இ. வேலுப்பிள்ளை, ச. சுப்பிரமணியம், வ. வேலுப்பிள்ளை, வ. நடராசா, இச்சங்கத்தின் பாதுகாவலராக நெடுந்தீவுக் கிராமசபைத் தலைவர் திரு. ம. கணபதிப்பிள்ளையும், நெடுந்தீவுக் காரியாதிகாரி திரு எம். அந்தோனிமுத்துவும் தெரிவு செய்யப்பட்டனர்.

## குருபூசை

பருத்தித்துறை, வெள்ளி

தென்புலோலியூர் உதய கதிர்காமத்தில் சுந்தர மூர்த்திநாயனார் குருபூசை விசேடமான முறையில் கொண்டாடப் பட்டதுடன் அடியார்கட்கு அன்னதானமும் வழங்கப்பட்டது.

## பாராட்டுவிழாவும் பட்டமும்

யாழ்ப்பாணம், சனி

தாவடி காந்தி கலை வளர்ச்சி நாடக மன்றத்தின் சார்பிலும் தாவடி கிராம மக்கள் சார்பிலும் சென்ற வாரம் திரு. சபாரத்தினத்திற்கு ஒரு பாராட்டுவிழா நடைபெற்றது. இவ்விழாவில் ஒரு சிறந்த நகைச்சுவை நடிகர் எனத் தேர்ந்தெடுத்து திரு. சபாரத்தினத்திற்கு "நகைச்சுவைமணி" என்ற பட்டத்தை நாடக மன்றத்தினர் அளித்துள்ளார்கள்

Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

# ஸ்ரீநகர் - லே ரஸ்தா துண்டிக்கப்பட்டது?

## 50 இந்தியர்கள் பலி; 40 லொறிகள்
## ஆயுதசாலைகள், சப்ளைகிடங்குகள் அழிந்தனவாம்
### பாகிஸ்தான் தரப்பில் அறிவிப்பு

கராச்சி, ஆக. 13

"காஷ்மீர் விடுதலை இயக்கத்தினர் பல இந்திய சப்ளை கிடங்குகள் ஆயுதச் சாலைகள், பெட்ரோல் டாங்குகள், பாலங்கள் ஆகியவற்றை முற்றுக நாசமாக்கிவிட்டார்கள்" என "காஷ்மீரின்" குரல் என்ற வானொலிநிலையம் அறிவித்தது. ஸ்ரீநகர்—லே ரஸ்தாவையும் அவர்கள் துண்டித்துவிட்டார்களாம்.

ஸ்ரீநகரின் வடமேற்குப் பகுதியில்தான் அவர்கள் தீவிரமாகச் செயற்படுகிறார்கள் என்றும், இங்கு எண்ணெய்க் குதங்களுக்கு நெருப்பு வைத்ததுடன் 60 இந்திய வீரர்களைக் கொன்றதாகவும் அது மேலும் கூறியது. 40 இந்திய ராணுவ லொறிகள் அழிக்கப்பட்டனவாம்,

மற்றோரிடத்தில் பாலம் ஒன்றைத் தகர்த்து 9 சொனிசாரை அவர்கள் கொன்றதாயும், கார்திப்பகுதியில் பெரும்சண்டை நடைபெற்று வருவதாயும் அந்த வானொலி மேலும் அறிவித்தது.

காஷ்மீர் விஷயமாக இந்தியா, பாகிஸ்தான் இருநாடுகளும் ஒரு சுமுக முடிவுக்கு வரவேண்டும் என வாஷிங்டனில் ராஜாங்க இலாகா பேச்சாளர் ஒருவர் நேற்றுக் கூறினார்.

## 6 உலகத் தலைவர்களுக்கு 8 'நோபல்பரிசார்' வேண்டுகோள்

லண்டன், ஆக. 13

வியட்னாம் பிரச்னையை அமைதிப்பேச்சு மூலம் தீர்க்கமுயலுமாறு நோபல் பரிசு பெற்ற 8 பேர் 6 உலகத் தலைவர்களுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். மற்றும் இரு நோபல் பரிசு பெற்றவர்கள் தாங்கள் வகிக்கும் பதவிகாரணமாக இந்த வேண்டுகோள் ஒப்பமிட முடியவில்லை எனக் கூறியிருக்கிறார்கள்.

ஜனாதிபதி ஜோன்ஸன், டாக்டர் கோஜிமின், மாஸேதுங், யுதாண்ட், கோஸிஜின், போப்பாண்டவர் ஆகியோருக்கு இந்த வேண்டுகோள் அனுப்பப்பட்டிருக்கிறது.

## 'அன்பார்ந்த ஜோன்ஸனுக்கு' நிக்ருமாவின் 2-வது கடிதம்

ஆக்ரா, ஆக. 13

வியட்னாம் விஷயமாக கானா அதிபர் நிக்ருமா ஜனாதிபதி ஜோன்ஸனுக்கு இரண்டாவது கடிதம் ஒன்றை அனுப்பியிருப்பதாக ஆக்ரா ரேடியோ அறிவித்தது. அவர் முதலில் அனுப்பிய கடிதத்தில் வடக்கு வியட்னாம் மீது குண்டுவீச்சை நிறுத்தவேண்டுமெனக் கேட்டிருந்தார். ஆனால் திரு. ஜோன்ஸன் இதை நிராகரித்துவிட்டார்.

மீண்டும் அவர் இப்போது அனுப்பியிருக்கும் இரண்டாவது கடிதத்தில் டாக்டர் நிக்ருமா என்ன குறிப்பிட்டிருக்கிறார் என்ற விஷயம் வெளியிடப்படவில்லை.

## 100 முஜாஹிர்கள் பாகிஸ்தானுக்குள் ஓடிவிட்டனராம்
### ஊடுருவல்காரர்கள் இரு பகுதிகளில் சுற்றி வளைக்கப்பட்டனர்

ஸ்ரீநகர், ஆக. 13

இன்று அதிகாலை ஸ்ரீநகருக்கு வெளிப்பகுதியில் இந்தியத்துருப்புக்களுக்கும் ஊடுருவல்காரர்களுக்குமிடையே சண்டை நடைபெற்றதாயும், சிவில்பொலிஸ்முகாம் ஒன்றை அவர்கள் தாக்கினார்கள் என்றும் அறிவிக்கப்படுகிறது. இரவு 1-30 முதல் அதிகாலை 4 மணிவரை இருதரப்பாருக்குமிடையே துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றபின், அப்பகுதியை இந்தியத்துருப்புக்கள் சுற்றிவளைத்துக் கொண்டுவிட்டதாயும் மேலும்அறிவிக்கப்பட்டது

**100 பேர் ஓடிவிட்டனர்**

ஸ்ரீநகரிலிருந்து 25 மைல் தூரத்திலுள்ள பெருபகுதியில் இரண்டு பட்டாளங்கள் ஊடுருவல்காரர்களைத் தேடி வருகிறது. சாம்பகுதியில் தொடர்ந்து சண்டை நடைபெற்று வருவதாயும், அங்கிருந்த 200 முஜாஹிர்களில் 100 பேர் பாகிஸ்தானுக்கு ஓடிவிட்டார்கள் என்றும் மேலும் அறிவிக்கப்பட்டது.

**சுற்றிவளைப்பு**

பூஞ்சில் ஊடுருவல்காரர்கள் சுற்றிவளைக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும், நேற்று 25 பாகிஸ்தானியர் கொல்லப்பட்டு, 14 பேர் சிறைபிடிக்கப்பட்டனர் என்றும் கூறப்பட்டது. சிறைபிடிக்கப்பட்டவர்களை திரு. நந்தா பார்வையிட்டார்.

**ஒவ்வொருவரையும் பிடிப்போம்**

காஷ்மீர் கவர்னர் கரன்சிங், முதல்மந்திரி திரு. ஸாதிக் ஆகியோரை திரு. நந்தா சந்தித்து ஊடுருவல்பற்றி விவாதித்தார். பாகிஸ்தான் ஊடுருவலை இந்திய அரசாங்கம் மிகத் தீவிரமாய்க் கருதுவதாயும், ஒவ்வொரு ஊடுருவல்காரரும் பிடிக்கப்படுவார்கள் என்றும் அவர் நிருபர்களிடம் கூறினார். ராணுவ, பொலிஸ் அதிகாரிகளுடனும் அவர் பேச்சுநடத்தினார்.

நேற்று கைப்பற்றப்பட்ட பொருட்களில் அமெரிக்க துப்பாக்கிகளும், தூங்கும்பைகளும், சீனப்பொருட்களும் இருந்தனவாம்.

**கைதிகள் சோர்வு**

கைதுசெய்யப்பட்ட ஊடுருவல்காரர்களை நேற்று பேட்டி கண்ட நிருபர்கள், கைதிகள் சோர்வடைந்திருக்கிறார்கள் என்றும். பாகிஸ்தானின் அதிகாரிகளை அவர்கள் குறைகூறியதாயும் தெரிவித்தனர்.

**கொரில்லா பயிற்சி**

தங்களுக்கு கடந்த மே 25-ம் திகதி முதல் தீவிர கொரில்லா பயிற்சிகள் அளிக்கப்பட்டன என்றும், ஜெனரல் அக்தார் ஹூஸெய்ன் மலிக் தலைமையில தீவிர நாசவேலைப்பயிற்சிகள் அளிக்கப்பட்டன என்றும் அவர்கள் கூறினார்களாம்.

கைதிகளில் அதிகாரிகள் பாகிஸ்தான் ராணுவத்தில் அவசரகால கமிஷன் பதவியை வகிப்பார்கள்.

"கொரில்லா போர் முறையில் 6 வார காலமுறையான பயிற்சி வழங்கப்பட்டது. பாலங்கள், சப்ளை தளங்கள், ராணுவதலைமைக் காரியாலயங்கள் ஆகியவற்றைத்தாக்குதல், நவீன ஆயுதங்களைக் கையாள்தல் ஆகியவற்றை இப்பயிற்சி கண்டிருந்தன" என்றும் அவர்கள் கூறினர்.

இவர்களில் பெரும்பாலோர் பாகிஸ்தானின் முறையான ராணுவத்தைச் சேர்ந்தவர்கள்

நேற்று கிழக்கு பாகிஸ்தான் துப்பாக்கிப்படையினர் லத்தீதீலா தேயிலைத் தோட்டத்தில் வேலைசெய்து கொண்டிருந்த தொழிலாளர்கள் மீது சுட்டார்கள். லேசரக இயந்திரத்துப்பாக்கிகளை அவர்கள் உபயோகித்தார்கள்.

நேற்றுமுன் 109 பாகிஸ்தானியர் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்று அறிவிக்கப்பட்டது.

வாஷிங்டனிலுள்ள இந்தியத் தூதர் திரு. பி. கே. நேரு அமெரிக்க வெளிநாட்டு மந்திரி ரஸ்கைச் சந்தித்து காஷ்மீர்பற்றி அவரிடம் எடுத்துரைத்தார்.

## பிரஞ்சு மந்திரி புறப்பாடு

புதுடில்லி, ஆக. 13

இங்கு வந்திருந்த பிரெஞ்சு கலாசார மந்திரி நேற்று பாரிஸ் புறப்பட்டார்;

## 'ஹிந்தி எதிர்ப்பு ஆர்ப்பாட்டமில்லை'

சென்னை, ஆக. 13

சுதந்திரதினத்தன்றோ, அல்லது அதற்குப் பின்போ ஹிந்தி எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடப் போவதில்லை எனத் தமிழ் நாட்டு மாணவர்கள் முதல் மந்திரி திரு பக்தவத்சலத்திடம் உறுதியளித்திருக்கிறார்கள். இத்தகவலை வெளியிட்ட முதல் மந்திரி, கைதான தங்கள் சகாக்களை விடுவிக்குமாறு மாணவர்கள் கோரியிருக்கிறார்கள் என்றார்.

ஆனால் அவர்களை விடுதலை செய்யும் விஷயம் பற்றி தொடர்ந்து பரிசீலனை செய்யப்படுவதாயும் உரிய காலத்திற்கு மேல் அவர்கள் காவலில் வைக்கப்படமாட்டார்கள் என்றும் முதல் மந்திரி கூறினார்.

## சினத்ரா மறுப்பு

நியூயோர்க், ஆக. 13

19 வயதான மியாபாரோ என்ற டெலிவிஷன் நடிகையைத் தாம் மணந்துகொண்டதாகக் கூறப்படும் வதந்திகளை 49 வயதான பாடகநடிகர் மறுத்தார்.

ரோட்தீவிலிருந்து சினத்ரா தனதுநண்பர்களுடனும்பாரோவுடனும் உல்லாசக்கப்பலில் சென்று நியூ இங்கிலாந்து கரையில் இறங்கியபின் நிருபர்களின் கேள்விக்கு இவ்வாறு அவர் பதிலளித்தார்.

"நான் பாரோவை மணக்கவில்லை. இப்படியான ஒரு விஷயத்தை இரகசியமாக வைத்துக்கொள்ளமுடியுமா? என்றும் அவர் கூறினார்.

## எல்லைச்சண்டை

டமாஸ்கஸ், ஆக, 13

ஸிரியா-இஸ்ரேல்-எல்லையில் இருதரப்பினருக்குமிடையே கடும் சண்டை நடைபெற்றதாக அறிவிக்கப்படுகிறது.

## பாரிஸில் நேரு காட்சி

பாரிஸ், ஆக. 13

அடுத்த ஆண்டு பாரிஸில் நேரு [illegible] இங்கு அறிவிக்கப்பட்டது.

## கிரீஸில் அரசியல் நெருக்கடி நீடித்து வருகிறது
### பபாந்திரியோஸ் - மன்னர் கெடுபிடியின் விளைவு

ஏதென்ஸ், ஆக. 13

கிரீஸில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி இன்னும் தீரவில்லை.

முன்னாள் பிரதமர் திரு. பபாந்திரியோசும் மன்னர் கொன்ஸ்டன்டைனும் நேற்று நீண்ட நேரம் பேச்சு நடத்தினர். எனினும் மந்திரி சபை அமைக்குமாறு திரு. பபாந்திரியோசைக்கேட்டுக்கொள்ள மன்னர் விரும்பவில்லை என அறிவிக்கபடுகிறது.

இச்சந்திப்புக்குப்பின் வெளியிடப்பட்ட அரண்மனை அறிக்கையில், திரு பபாந்திரியோசுக்கு பார்லிமெண்டில் பெரும்பான்மைப்பலம் இல்லையெனக் கூறப்பட்டிருக்கிறது மக்களை அவர் தூண்டிவருகிறார் என்றும் அறிக்கையில் குற்றஞ்சாட்டப்பட்டது.

தற்காலிகப் பிரதமர் திரு. நோவாஸும் நேற்று மன்னரைச் சந்தித்தார்.

அதேசமயம் நேற்று கிரீஸில் பல்லாயிரக்கணக்கான மக்கள் மீண்டும் பபாந்திரியோசை ஆதரித்து ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். மன்னருக்கு விரோதமான கோஷங்களையும் அவர்கள் எழுப்பினார்கள்.

## "சிங்கப்பூர் பிரிந்ததற்கும் பிரிட்டனுக்கும்தொடர்பில்லை"
### தங்கள் சொந்த முடிவு என்கிறார் பிரதமர் துங்கு ரஹ்மான்

கோலாலம்பூர், ஆக. 13

சிங்கப்பூரை விட்டு மலேசியா பிரிந்தது தங்கள் அரசாங்கத்தின் சொந்த முடிவு என்றும், பிரிட்டனுக்கு இதில் சம்பந்தம் எதுவும கிடையாது என்றும் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் கூறினார்.

"பிரிட்டனுக்கு இதுபற்றி தெரியவும் செய்யாது. எங்கள் நாட்டையும், மக்களையும் குழப்பத்திலிருந்து மீட்க இது ஒன்றே சிறந்த பரிகாரம் வேறு வழி கிடையாது" என்றும் அவர் கூறினார்.

"தற்போதைய நிலையில் முன்பிருந்ததைவிட அமைதியாகவும் ஒற்றுமையாகவும் இருக்குமாறு மக்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்" என்ளுர் துங்கு ரஹ்மான்.

மலேஸியா-சிங்கப்பூர் பிரிவினையில் பிரிட்டனுக்கும் பங்கு இருக்கக்கூடும் என "மலாயன் டைம்ஸ்" பத்திரிகை தெரிவித்திருக்கிறது.

## சிங்கப்பூர் அரசியல் சாஸனம்

சிங்கப்பூர், ஆக. 13

சிங்கப்பூரிலுள்ள இந்தியர்களுக்கு நிரந்தர பாதுகாப்பளிக்கும் ஷரத்தை அரசியல் சாஸனத்தில் சேர்க்கப்போவதாய் பிரதமர் ஸ்ரீ குவான்யூ நிருபர்களிடம் கூறினார். சிங்கப்பூருக்கு அரசியல் சாஸனம் ஒன்றை வகுக்க உதவி புரியுமாறு இந்திய, ஆஸ்திரேலிய தலைமை நீதிபதிகளைத் தாம் கேட்டுக்கொள்ளப்போவதாயும் பிரதமர் கூறினார்.

## அருணாவுக்கு லெனின் பரிசு

மாஸ்கோ, ஆக. 13

ஸ்ரீமதி அருணா அசப் அலிக்கு சமாதான லெனின் பரிசு வழங்கப்பட்டிருக்கிறது. ரூ. 1,25000க்கு அதிகமான இப்பரிசுத் தொகையின் ஒரு பகுதியை, நேரு நினைவு நிதிக்குத் தாம் அளிக்கப்போவதாய் அவர் கூறினார். ஸ்ரீமதி அருணாவுடன் சேர்த்து இதுவரை 4 இந்தியர்களுக்கு லெனின் பரிசு வழங்கப்பட்டிருக்கிறது.

## ஆயுத பரிகரண மகாநாடு

ஜெனிவா, ஆக. 13

இங்கு நடைபெற்று வரும் ஆயுதப் பரிகரண மகாநாட்டில் அணு ஆயுதங்களை ஒழிப்பது பற்றி இந்தியா ஒரு திட்டத்தை வெளியிட்டது. இது மிகவும் சுவாரஸ்யமான திட்டம் என்றும், அதைக் கவனமாக ஆராயவேண்டும் வேண்டும் என்றும் ரஷ்யா மகாநாட்டில் தெரிவித்தது.

## தாயகம் திரும்ப அழைப்பு

ஸைகோன், ஆக. 13

வெளி நாடுகளில் பயிலும் 33 வயது வரையான சகல தென் வியட்னாம் மாணவர்களும் உடனடியாக தாயகவும் திரும்புமாறு வியட்காங்கியரை எதிர்த்துப் போராட படையில் சேருமாறு அழைக்கப்பட்டிருக்கிறார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொற்கிழி வழங்க முடிவு

பருத்தித்துறை, வெள்ளி

பருத்தித்துறைப் பகுதிப் பாடசாலைகளின் பரிசோதகராகக் கடமையாற்றி தமது சேவையினின்றும் இளைப்பாறிய வட்டார வித்தியாதிசி திரு. வி. முத்துலிங்கத்தின் சேவையை முன்னிட்டு சேவைநலம் பாராட்டு விழா வொன்றை நடாத்துவதென வட்டாரப் பாடசாலைகளின் ஆசிரியர் சங்கம் முடிவு செய்துள்ளது.

பருத்தித்துறை சித்திவிநாயகர் பாடசாலையில் பண்டித வித்துவான் திரு. க. கிருஷ்ண பிள்ளை தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பாராட்டு விழாவை இம்மாதம் 26-ம் திகதி அன்று நடாத்துவதுடன் அன்னாருக்குப் பொற்கிழி வழங்கி கௌரவிப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது.

## யூ. என்; பி. யூனியன்

பருத்தித்துறை, வெள்ளி

பருத்தித்துறை இ. போ. ச டிப்போத் தொழிலாளர்கள் மத்தியில் தற்போது இருக்கும் சமசமாஜ, கம்யூனிஸ்ட், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிகட்கு ஆதரவான தொழிற்சங்கங்கள் இருந்து வருவதுடன் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவான தொழிற் சங்கம் ஒன்றும் விரைவில் அங்குராரப்பணம் செய்யப்படவிருப்பதாகத் தெரியவருகிறது.

வடமராட்சி ஐ. தே. கட்சிக் கிளையைச் சேர்ந்த சில பிரமுகர்கள் இது விடயமாகத் தொழிலாளர்களிடம் தொடர்பு கொண்டுள்ளனர் எனக் கூறப்படுகிறது.

## தொழிலாளருக்கு வேண்டுகோள்

பருத்தித்துறை, வெள்ளி

பழிவாங்கும் செயலை எதிர்த்துப் போராடுவோம், கோரிக்கைகளை வென்றெடுக்க முன் செல்வோம் எனும் தலைப்புடன் இலங்கை மோட்டார் தொழிலாளர் சங்கம் தொழிலாளர்கட்கு வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது.

துண்டுப் பிரசுர மூலம் விடுக்கப்பட்ட இவ்வேண்டுகோளில் சங்கத்தின் கடந்தகால முயற்சிகள் பற்றிக் கூறி இருப்பதுடன் யூ. என். பி. தொழிற் சங்கமொன்றை இ. போ. சவிற்குள் ஸ்தாபித்தனர் காரணம் தேசிய மயமாக்கப்பட்ட பஸ்சேவையை திரும்பவும்

பஸ் முதலாளிமார்களுக்குக் கொடுக்கத் தொழிலாளர்களை ஆயுதமாகப் பாவிக்கவே என அச்சமும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## காய்கறி விற்பனை நிலையம்

பருத்தித்துறை, வெள்ளி

பருத்தித்துறைப் பட்டின சபையின் உபதலைவர் தெளிவு இம்மாதம் 14-ம் திகதியன்று நடைபெறும் மாதாந்தக் கூட்டத்தில் நடைபெறவிருக்கின்றது.

மேற்படி கூட்டத்தில் பருத்தித்துறை மார்க்கட்டை அடுத்து பொதுமக்களின் நன்மையைக் கருதி காய்கறி விற்பனை நிலையம் ஒன்றை அமைத்து உதவும்படி கோரும் பிரேரணையொன்றை சமர்ப்பிப்பதாக நகரசபையின் தலைவர் திரு. க. நடராசா முன் அறிவித்தல் செய்துள்ளார்.

## வலைகள் திருட்டு

காங்கேசன்துறை, வெள்ளி

மைலிட்டியைச் சேர்ந்த இராசசிங்கத்திற்கு சொந்தமான ஸ்ரீ வரதன் வள்ளத்தையும் வலைகளையும் களவாடிச்சென்றதாக அதே ஊரைச் சேர்ந்த சந்தேக நபரான வி. திருநாவுக்கரசு என்பவரை அவரது இல்லத்தில்வைத்து காங்கேசன்துறை பொலிசைச் சேர்ந்த சார்ஜன்ட் வடிவேலு கைது செய்து இன்று மல்லாகம் நீதிபதி முன்னிலையில் ஆஜர் செய்தார். வள்ளத்தில் இருந்த வலைகள் வல்வெட்டித்துறை பெரிய கல்லடியைச் சேர்ந்த சுப்பிரமணியத்திற்கு சொந்தமான களுச்சில் இருந்து காங்கேசன்துறை பொலிசார் கைப்பற்றினர். இது சம்பந்தமாக பொலிசார் மற்றும் சந்தேக நபர்களை தேடி வருகின்றனர்.

## நீச்சல் போட்டி

உடுப்பிட்டி, வெள்ளி

யாழ்ப்பாண மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாசம் நடாத்தும் மாபெரும் நீச்சல் போட்டி இம்மாதம் 28-ம் திகதி பிற்பகல் கீரிமலைக் கடலில் வடபகுதி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு எஸ். சி. மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

மாணவர்களுக்கும் முதியவர்களுக்கும் தனித்தனி போட்டி நடைபெறும். போட்டித்தூரம் மாணவர்களுக்கு ஒரு மைலும், மற்றவர்களுக்கு இரண்டு மைலுமாகும்.

பஞ்சபாண நிகழ்ச்சி

## யாழ்ப்பாணத்திலும் ஒலிப்பதிவாகும்

கொழும்பு, வெள்ளி

இலங்கை வானொலி தேசிய ஒலிபரப்பின் தமிழ்ப் பகுதியில் நடைபெற்றுவரும் பஞ்சபாண நிகழ்ச்சியிற் பங்குபற்ற வெளியூர் நேயர்களுக்கும் சந்தர்ப்பம் அளிக்கும் நோக்கத்துடன் வானொலி நிலையத்தார் இந்நிகழ்ச்சியை வசதிப்பட்டபோது வெளியூர்களிலும் ஒலிப்பதிவு செய்யக் கருதியுள்ளனர். பஞ்சபாண நிகழ்ச்சியின் அடுத்த ஒலிப்பதிவு யாழ்ப்பாண நகரில் இம்மாதம் 28-ம் திகதி காலை 9-00 மணிக்கு நடைபெறும்.

இம்மாதம் 28-ம் திகதி மாலை இலங்கை வானொலித் தமிழ்ப் பகுதியினர் யாழ்ப்பாண நகரில் கலைவிழா ஒன்றையும் ஒலிப்பதிவு செய்ய ஏற்பாடு செய்துள்ளனர்.

## மத்திய கல்லூரி ஆண்டுவிழா

மட்டக்களப்பு, வெள்ளி

மட்டக்களப்பு மெதடிஸ்த மத்தியகல்லூரி பழையமாணவ சங்கத்தால கடந்த 7-ம், 8-ம் 10-ந் திகதிகளில் கல்லூரி முன்றலில் சங்க ஆண்டு விழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. முதல் நாள் நிகழ்ச்சி சங்கத் தலைவர் கோபிரசரத்தினம் தலைமையில் ஆண்டு விழா ஆரம்பமாகியது. 1965-ம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்து கல்லூரியின் அதிபராக நியமனம் பெற்று கடமையாற்றி வரும் திரு. பி கி. சின்னையாவை பழைய மாணவசங்கத்தினர் வரவேற்றனர். வரவேற்புரைக்கு நன்றியுரை கூறும்போது திரு. சின்னையா கூறியதாவது:

அரசாங்கம் இந்தக் கல்வி நிலையத்தின் பொறுப்பை என் கையில் அளித்திருக்கிறது. கடமையைச் செயவதுடன் என்னால் இயன்றவரை இப்பாடசாலையின் ஒழுங்கையும் நிலைநாட்டுவேன்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சியின்போது பாடசாலை பழைய மாணவர்களுக்கும், பாடசாலை அதிபர் ஆசிரியர்களுக்கும் விருந்துஉபசாரம் அளிக்கப்பட்டு 8-ம் நாள் ஒரு பொதுக்கூட்டமும் நடைபெற்றது.

## தமிழ் படும் பாடு

கொஸ்லாந்தை, வெள்ளி

பதுளை, பண்டாரவளை பஸ் டிப்போகளில் உள்ள சேரகுசி பல வைகளிலும், பஸ்களிலும் தமிழ் எழுத்துக்கள் கொலை செய்யப்பட்டு இருக்கின்றன மட்டக்களப்புக்கு "மட்டக்கிழப்பு" என்றும் பசறைக்கு "டச்சறை" என்றும் மொனராகலைக்கு "மொனரகல" என்றும் பூனாகலைக்கு "பூணாகொல்லை" என்றும் எழுதப்பட்டிருக்கின்றன. இதனால் பிரயாணிகள் பஸ் வண்டிகளை தேடிப் பிடிப்பது சிரமமாக இருக்கிறது.

## வருடாந்த உற்சவம்

சுழிபுரம், வெள்ளி

பொன்னாலை ஸ்ரீ வரதராசப் பெருமான் கோவில் வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த நாலாம் திகதி தொடக்கம் ஆரம்பமாகிவெகுவிமரிசையாக நடைபெற்றுவருகின்றன. தொடர்ந்து பதினெழு நாட்கள் திருவிழாக்கள் நடைபெற்று 20-ம் திகதி தேர்த்திருவிழாவும் உறியடி உற்சவமும் நடைபெறும்.

## இடமாற்றம்

உடுப்பிட்டி, வெள்ளி

வல்வெட்டித்துறை பட்டின சபையில் வரி அறவிடும் அதிகாரியாகக் கடமையாற்றிய ... வரி அறவிடும் அதிகாரியாக இடமாற்றஞ்செய்யப்பட்டுள்ளார்.

## யாத்திரிகர்களுக்கு காயம்

பண்டாரவளை, வெள்ளி

கதிர்காமம் சென்றுகொண்டிருந்த இ. போ. ச. பஸ் ஒன்று பாதையை விட்டு விலகி புரண்டபொழுது 24 பிரயாணிகள் காயமடைந்தனர். இச்சம்பவம் வெல்லவாயா—தனமலவில்லை ரோட்டில் நடைபெற்றது.

காயமடைந்தவர்கள் அவ்வழியால் சென்ற பொது மக்களால் மீட்கப்பட்டு ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டனர்.

## மந்திரிக்கு மகஜர்

சுழிபுரம், வெள்ளி

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் தலைவர் சமூகஜோதி தியாகராசா உள்ளூராட்சி மந்திரி திரு. எம். திருச்செல்வத்திடம் எல்லா சனசமூக நிலையங்களுக்கும்

... நன்கொடைப பணம் வழங்க வேண்டும் என்று கோரி மகஜர் ஒன்றை சமர்ப்பித்துள்ளார்.

## சாவகச்சேரியில் இசைவிழா

மீசாலை, வெள்ளி

தென்மராட்சி இசைக் கலை மன்றத்தின் 10-வது ஆண்டு இசைவிழா செப்டம்பர் மாதம் 10-ம் திகதி முதல் 14-ம் திகதி வரை 5 தினங்கள் நடைபெறும்.

சாவகச்சேரி வாரிவனநாதர் சிவன் கோவில் முன்றலில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் பல கலைஞர்கள் கலந்து கொள்வார்கள்.

## ரஷ்யர் போரிடுவர்?

மாஸ்கோ, ஆக 13

ரஷ்ய இளைஞர்கள் வியட்நாமில் சண்டையிட முன் வந்திருக்கிறார்கள் என ரஷ்யப் பத்திரிகை ஒன்று கூறியிருக்கிறது.


# இலங்கையில் பலகோடி பெறுமதியான வெட்டு மரம் ஆண்டுதோறும் அழிக்கப்படுகின்றன

## இல்லங்களிலும் பண்ணைகளிலும் மரங்கள் பீடைகளின் தாக்குதலுக்கு இலக்காகின்றன

நம்நாட்டிலே இன்று, கறையான், மரவண்டு ஆதிய பீடைகளினால் மரங்கள், வெட்டிய துண்டு மரங்கள், மற்றும் பதப்படுத்தப்பட்ட மரத்தினாலான பொருட்கள் ஆதியன அபாயகரமான பெரும் சேதத்துக்கு உள்ளாகின்றன. மரப்பொருட்கள் இன்று தயாக்கப்பட்டு விற்பனையாகும் நிலைமைகளினாலும், அவற்றின் பாவனை நிலைமைகளினாலும், இப் பீடைகளின் தாக்குதலுக்கு பெரிதும் உட்படுகின்றன. உஷ்ண பிரதேசங்களில் மரத்தை உக்கவைத்துச் சேதம் விளைவிக்கும் பீடையாகிய காளான். பெரும் சத்துராதியாகின்றது. இன்று இறக்குமதியாகும் மரப்பாதுகாப்பு மருந்துகள் யாவும் பெரும்பாலும் சக்திவாய்ந்த காளான் நாசினிகளாகவும், ஆனால் வலுக்குறைந்த இருமிநாசினிகளாகவுமே விளங்குகின்றன. கறையான், மரவண்டு ஆதிய பீடைகளின் நாசகாரியத்தை கட்டுப்படுத்த இத்தயாரிப்புகள் போதுமானவையல்ல.

ஆயின், ஷெல் மரப்பாதுகாப்பு மருந்துகள் இப்பீடைகளை அறவே கட்டுப்படுத்தும் நோக்குடன், விசேடமான முறையில் தயாரித்தளிக்கப்படும் மிகச்சக்தி வாய்ந்த நாசினிகளாகத்திகழ்கின்றன.

**பீடைகளின் தாக்குதல்.**

இலங்கையிலே, பொதுவாக மரத்தைத் தாக்கும்பீடை கறையான் ஆகின்றது. இதை நாம் இலகுவில் கண்டுபிடிக்க முடிவதில்லை. ஆகவே, உத்திரம் போன்ற தடித்த குறை மரங்களைத்தானும் துரிதமாகத் தாக்கி வெளிப்பார்வைக்கு நல்லதாகத் தோற்றும் கோதுமரத்தை மட்டுமே விட்டுவைக்கின்றது. ஷெல் மரப்பாதுகாப்பு மருந்துகளில் கலந்துள்ள டீல்றின் எனும் இருமிநாசினி கறையானை அறவே அழித்துக்கட்டுகின்றது.

**மரம் உக்குதல்**

பெரும்பாலும் மறைவாக உள்ள இடங்களிலேயே மரம் உக்குகின்றது. இதை கண்டுபிடித்து அகற்றுமுன் விரிவான சேதம் ஏற்பட்டு விடுகின்றது உத்திரம், தராய் போன்ற கூரை மரங்கள் உக்கி உழுத்து எச்சரிக்கையின்றி விழுந்து போகக் கூடும். ஷெல் மரப்பாதுகாப்பு மருந்துகளில் கலந்துள்ள பெண்டாகுளோரோபினைல் எனும் மருந்து இவ்வித சேதத்தை தடுக்கின்றது.

**மரப்பாது காப்பு மருந்து "ஏ"**

இம் மருந்து கறை ஏற்படுத்தாதது. சகல மரங்களுக்கும் வெட்டித் தயாரிக்கப்பட்ட மரத்துண்டுகளுக்கும் இதைப் பூசலாம். பின்னர் வர்ணம் பூசவிருக்கும் மரங்களில் பாவிப்பதற்கு இது மிகவும் சிறந்தது.

**மரப்பாது காப்பு மருந்து "பி"**

இம் மருந்து கடும் ஊதா நிறமுள்ள கறையை ஏற்படுத்துகின்றது. கட்டிட வேலைகளுக்குரிய மரங்கள், வேலிக் கம்பங்கள், தந்திக் கம்பங்கள் போன்ற மரங்களுக்கும் மற்றும் பண்ணைகள், தோட்டங்கள் இல்லங்கள், யாவற்றிலும் கறையை விரும்பப்படும் சகல மரங்களிலும் பாவிக்கலாம்.




மரத்தை மருந்தில் நன்கு ஊற விட்டோ, அல்லது நன்கு செறிந்து நிற்கும் படி ஒரு பிரஷ் கொண்டு பூசியோ இவ்விரண்டு மருந்துகளையும் பாவிக்கலாம். ஷெல் மரப்பாதுகாப்பு மருந்துகள் 1 கலன், மற்றும் 4 கலன் டின்களிலும் 45 கலன் பெரிய பீப்பாய்களிலும் கிடைக்கப்பெறுகின்றன.

இலங்கையில் எல்லா இடங்களிலும் கிடைக்கும்

ஷெல் ரசாயனப்பொருட்கள் SHELL





## விளம்பரம்

### அறிவித்தல்

K S ஐயாத்துரை ஆகிய நான் யாழ்ப்பாணம் N S தாசன் & கோ ஸ்தாபனத்தாரின் சேவையில் இல்லையென்பதையும், K. S ஐயாத்துரை & கோ, 68, பாங்ஷால் வீதியில் சொந்தமாக வியாபாரம் நடத்துகிறேன் என்பதையும் எனது ஆதரவாளர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்படிக்கு
K. S ஐயாத்துரை
68, பாங்ஷால் வீதி,
யாழ்ப்பாணம் 499


### புதிய அசைஸ் கமிஷனர்

பலப்பிட்டி வெலவெளி வழக்கறிஞர் திரு. சி. ஜி. வீரமந்திரி புதிய அசைஸ் கமிஷனராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கொழும்பில் ஆகஸ்ட் 16-ந் திகதி திங்கட்கிழமை பதவி ஏற்பார்.

தற்பொழுது கொழும்பில் அசைஸ் கமிஷனராகக் கடமையாற்றும் திரு. வி. சிவசுப்பிரமணியம் கொழும்பிற்கு திரும்பி செல்வார்.


REGAL - JAFFNA
NOW SHOWING

Richard Harrison
in
THE PITILESS 3
(Totalscope color)



யாழ்ப்பாணத்து-அல்லவை வைத்தீஸ்வரன் கோவில்

## கும்பாபிஷேக நிதி

இத்திருக்கோயிலில் திருப்பணிகள் சில இயற்றுவித்து மகாகும்பாபிஷேகம் நிகழ்த்த ஏற்பாடுகள் செய்கிறோம் ஆகையால் இக்கோவிலிலும் மற்றும் இடங்களிலும் சிலகாலமாக இத்திக்காக வைக்கப்பட்டிருக்கும் உண்டியல்களில் ஒவ்வொரு சைவ அன்பரும் தங்கள் தங்கள் உதவிப்பணத்தைச் சேர்த்து இறைவன் திருவருளைப் பெறுமாறு வேண்டுகிறோம்.

தபால் மூலம்பணம் அனுப்ப விரும்புவோர் கீழ் காணும் விலாசத்திற்கனுப்பவும்.

இங்ஙனம்
அரு வெங்கடாசலம்
ஆதீன கர்த்தர்
சிவன்கோவிலடி,
வல்வெட்டித்துறை.
9—8—65 807


### புதிய அமெரிக்க கொள்கை

வாஷிங்டன், ஆக 18

ஐ. நா சமாதனப் பணிக்கு ரஷ்யா பங்குப்பணம் செலுத்த மறுப்பது பற்றி அமெரிக்காவின் புதிய கொள்கையை ஜனாதிபதி ஜோன்ஸன் இவ்வாரம் வெளியிடுவார் என அறிவிக்கப்பட்டது.


இப்பொழுது வெற்றிமுரசு கொட்டுகிறது!

| | | |
|---|---|---|
| கைஸ்லி (கொழும்பு) | பிளாசா (வெள்ளவத்தை) | நவா (கொம்பனித்தெரு) |
| வெலிங்டன் (யாழ்ப்பாணம்) | விஜயா (மட்டக்களப்பு) | மோட்டேர்ன் (பதுளை) |
| விஜிதா (ஹட்டன்) | தீவொளி (நுவரெலியா) | கல்யாணி (காவலப்பிட்டி) |
| லக்ஷ்மி (இரத்தினபுரி) | அயன் (மன்னார்) | |



எம்.ஜி.ஆர்.-சரோஜாதேவி
மற்றும்பலர் நடிக்கும்
நீதிக்குப்பின் பாசம்


# "சைவ ஆலயங்கள் பாதுகாக்கப்பட வேண்டும்"

## தெல்லிப்பழை பரிசளிப்பு விழாவில் பேச்சு

தெல்லிப்பழை, வெள்ளி

தெல்லிப்பழை பாலர் ஞானோதய சபையின் 19-வது ஆண்டு பரிசளிப்பு விழா காசிவிநாயகர் ஆலய மண்டபத்தில், வலிகாமம் வடக்குப் பிரிவுக்காரியாதிகாரி திரு. க முருகேசம்பிள்ளை தலைமையில் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

ஸ்ரீ காசிவிநாயகப்பெருமானுக்கு விசேட ஆராதனைகளும் சபை மாணவர்களது கூட்டுப்பிரார்த்தனையும் நடைபெற்ற பின் தலைவர் தமது தலைமையுரையில் சைவ ஆலயங்களை மக்கள் பேணிப் பாதுகாக்கவேண்டியதின் அவசியத்தையும் சபையின் நற்பணிகளையும் எடுத்துரைத்தார்.

பண்டிதை, சைவப்புலவர் தங்கம்மா அப்பாக்குட்டி "திருநாவுக்கரசர் திருவுள்ளம்" என்னும் பொருள் பற்றிப் பேசுகையில், நாவுக்கரசர் எண்பத்தொரு ஆண்டுகள் பூமியில் வாழ்ந்து செய்த நற்பணிகளையும், அவரது திருவுள்ளப்பாங்கின் சிறப்புகளையும் எடுத்து விளக்கினர்.

இந்துசாதன ஆசிரியர் திரு நம. சிவப்பிரகாசமும், இளைப்பாறிய வித்தியாதரிசி திரு. அ சரவணமுத்துவும் ஆசியுரை கூறுகையில் காசிவிநாயகர் ஆலயம் புனருத்தாரணம் செய்யப்படவேண்டியதின் அவசியத்தையும் சபையின் வளர்ச்சியங்களையும் எடுத்துரைத்தார்கள்.

மாணவர்களது தேவாரப் பாடல்களும், மனனப்பிரசங்கம், திருமுறைஓதல், சங்கீத உபந்நியாசம் ஆகிய நிகழ்ச்சிகளும் நடைபெற்றபின் திருமதி தி. முருகேசபிள்ளை பின்வருவோருக்கு பரிசில்கள் வழங்கினர்.

### ஆரம்பபிரிவு

விசேடசித்தி: ம. ஞானகுமாரி, கா. நந்தகுமாரி. சாதாரணசித்தி: க, கனகதயாவாணி.

### பாலர் கீழ்ப்பிரிவு

விசேடசித்தி: வ. சயந்தன், இ இரத்தினேஸ்வரன், சாதாரணசித்தி: க, கனகதயாளன்.

### பாலர் மேற்பிரிவு

விசேடசித்தி: கா, சிவசங்கரன், மு. சுதாகரன், ம, ஞானகுமார், சோ, திருக்குமாரன், சி. சிவதேவி இன்பமலர்.

### மூன்றும் வகுப்பு

விசேடசித்தி: சொ. கணேஸ்வரி, செ. மகாலட்சுமி, க. கனகதயாசக்தி, ம. இராசலட்சுமி, சி. இந்திராணி, வ, நவநீதன், ச, சகிதேவி, ச மகாதேவி. சாதாரணசித்தி: செ. ஸ்ரீதரன்.

### நான்காம் வகுப்பு

விசேடசித்தி: கா. சிவகுகன், ம. ஞானரதி, மு. பிரபாகன், சி. சிவசோதி. சாதாரணசித்தி: க, லோகேஸ்வரி, க, கனகதயாபரி, சோ, கார்த்திகைக் குமாரன், ச; சிவசுப்பிரமணியம்.

### ஐந்தாம் வகுப்பு

விசேடசித்தி: அ. யோகேஸ்வரி, க, கனகதயாவதி, சொ. யோகேஸ்வரி, சொ, கணேஸ்வரன். சாதாரணசித்தி: சி. தர்மராசா, செ, கெங்காதரன், க வரதராஜன்.

### ஆறும் வகுப்பு

விசேடசித்தி: சி. சிவமணி, சொ. யோகேஸ்வரன், ம, ஞானரூபி.

### ஏழாம் வகுப்பு

விசேடசித்தி: மு. கீதாஞ்சலி. சாதாரணசித்தி: ம, ஞானகாந்தி, வ. கதிர்காமநாதன், க, கனகதயாளன்.

### எட்டாம் வகுப்பு

சாதாரணசித்தி: க, தயானகேசரி, கா. சிவகுமாரன், செ, ரவீந்திரன், அ, ஸ்ரீஸ்கந்தராசா.

### ஒன்பதாம் வகுப்பு

சாதாரணசித்தி: கு. சிவபாலன்.

### வாய்ப்பாட்டு

ம. ஞானசாந்தி.

### மிருதங்கம்

ச, வரதராஜன், ச, சிவசுப்பிரமணியம்.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

#### சனி 14-8-65

(செய்திகள் காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கத்தோலிக்கநற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 தேர்ந்த இசை, 8-15 இஸ்லாமியகீதம்.

பகல் 12-00 சித்திரகானம், 1 00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 மாணவர் மன்றம், 5-45 பட்டபாட்டுக்கள்.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 செய்திச்சுருள், 7-00 சங்கீதக்கச்சேரி, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 விமர்சனம், 9-30 உரைச்சித்திரம், 10-00 நேயர்விருப்பம்.

#### ஞாயிறு 15-8-65

காலை 6-45 மாதாஞ்சலி 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கத்தோலிக்கநற்சிந்தனை, 7-00 துதிப்பாட்டுகள், 7-30 தேர்ந்த இசை, 7-45 தமிழ்மொழிசை, 8-00 தோத்திரப்பாடல்கள், 8-15 தமிழ் மூலம் சிங்களம், 8-30 ஞானஞ்சலம், 9-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 படப்பாட்டுக்கள், 11-30 சிறுவர்மலர்.

பகல் 12-15 நேயர்விருப்பம், 1-00 மத்தாப்பு.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 பாட்டு, 5-45 திரை இசை.

இரவு 6-10 வாத்தியஇசை, 6-15 தானவாத்தியக்கச்சேரி, 6-45 நேயர்கடிதங்கள், 7-00 பாட்டு, 7-30 நாடகம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 மனோரஞ்சித மாதர் நிகழ்ச்சி 6-45 மாதர் கேட்டவை, 10-15 தேர்ந்த இசை.

## பாடசாலைவிளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணம் செட்டித்தெரு மெ. மி. தமிழ் கலவன் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி பாடசாலை மைதானத்தில் நடைபெற்றபோது ஆரம்பபிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு என்ற ரீதியில் மாணவர் பங்குபற்றினர். தலைமை ஆசிரியர் திரு க. யோகநாதன் விளையாட்டுப் போட்டியை ஆரம்பித்து வைத்தார். உதவி ஆசிரியை திருமதி ஆர். எஸ். சகரியாஸ் பரிசுகளை வழங்கினர்.

## மகளிர் போட்டி

உடுப்பிட்டி, வெள்ளி

யாழ்ப்பாண மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாசம் மகளிர்க்கென நடத்தும் ஒரு மைல் ஓட்டப் போட்டி இம்மாதம் 29-ம் திகதி மாலை வடபகுதி பொலிஸ் அதிபர் திரு. ஜே. வான்சன்டின் தலைமையில் நடைபெறவிருக்கிறது. யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திலிருந்து ஆரம்பமாகும் இப்போட்டியில் வீரர்கள் யாழ்ப்பாணக் கோட்டையைச் சுற்றியுள்ள வீதிவழியாகச் சென்று முடிவிடத்தை அடைதல்வேண்டும்,


வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க



அரசாங்க அறிவித்தல்
இலங்கை அரசாங்க கடற்படை

என். 1260 — உபயோகமற்ற சாமான்கள் 1965-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30-ம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு திருகோணமலை டொக்யாட்டில் ஏலத்தில் விற்கப்படும்.

மற்றும்விபரங்களுக்கு 1965-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13ம் திகதி அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.



### வரி விளம்பரம்

#### விற்பனைக்கு

காலபோக விதைப்பிற்குரிய நயம் விதைநெல்லு, கீரிமலைப் பாய் ரோட், யாழ்ப்பாணத்தில் விசாரிக்கவும், 778

சுத்தமான ஜே. சி. சுத்தமான ஐசார், மற்றும் கலப்புள்ள இளங்கன்று பால் மாடுகள் நான்கு விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: ப சி. பொன்னுத்துரை. இல: 30 காசிமார் கோயில் ரோட், யாழ்ப்பாணம். 751

#### தேவை

மக்கள் முன்னேற்ற இயக்கப் பணிக்கு இளைஞர்கள் தேவை. சம்பளம் உண்டு விவரங்களுக்கு: வித்துவான் வேலன், மக்கள் முன்னேற்ற இயக்கம், பருத்தித்துறை, 773

எங்களது இலங்கா தயாரிப்புகளை வீட்டிற்கு வீடு சென்று விற்பனை செய்யத்தக்க பெண்களும் ஆண்களும் தேவை. விண்ணப்பிக்கவும்! மனேஜர், இலங்கா லபோரட்டரீஸ் 46, பருத்தித்துறை வீதி யாழ்ப்பாணம். 764

திறமையுள்ள சேல்ஸ் (பொய்ஸ்), சாவகச்சேரி, பருத்தித்துறை ஊர்காவற்றுறை அச்சுவேலி, சங்கானை, சுன்னாகம் ஆகிய இடங்களுக்கு தேவை. நேரில் விண்ணப்பிக்கவும் டாட்டா ஸ்டோர்ஸ், சென்றல் சேவிஸ் ஸ்டேசன், (பின்), சுன்னாகம். 763

#### தட்டச்சு

தட்டச்சு இயந்திரங்கள் பழுது பார்த்துக் கொடுக்கப்படும். தொடர்பு கொள்ளுங்கள் ஜெயசேகரா, வணிகக் கல்லூரி, 278, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 771

#### கல்வி

B. A.;, B. Sc, Special & General G. A. Q, G. S. Q, G. C. E, (A/L & O/L- Arts & Science- December 1965 Examination Rapid Revision Special course & 1966 Examination) வகுப்புகள் பண்டிதமணி உயர்திரு சி. கணபதிப்பிள்ளை அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு ஒழுங்காக நடைபெறுகின்றன, தூர இடங்களிலுள்ளவர்களுக்காய பாடசாலை 3 தவணை விடுமுறைகாலை வகுப்புகள் 12-7-65 தொடக்கம் டி பரீட்சைகள் எல்லாவற்றுக்கும் நடைபெறுகின்றன. பாடங்களைத் தவறவிடாமல் இருப்பதற்கு உடனே சேருதல் நல்லது. விடுதி வசதியுண்டு. முத்திரை ஒட்டிய உறையுடன் விண்ணப்பஞ் செய்க. கா. க. சுப்பிரமணியம், கௌரவ பதிவாளர் வடபிரதேசக் கல்விக்கழகம் நமசிவாயவித்தியாலயம், கொக்குவில், யாழ்ப்பாணம். 769

தொய்வு, கசம், நீரழிவு, வெள்ளை முதலிய பலகொடிய வியாதிகள் குணம் படுத்திய விபரங்கள் அடங்கிய சுற்றலோக் இலும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணானந்தா, வைத்தியசாலை ... யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கைச் செலவைக் குறைகக இரு சபைகள்

## அரசாங்க அதிபர்களின் மகாநாட்டின் முடிவுகள்

பம்பலப்பிட்டி, வியாழன்

இன்று காலை உள்நாட்டு அமைச்சுக் காரியாலயத்தில் நடைபெற்ற அரசாங்க அதிபர்களினது முக்கிய மகாநாட்டில் வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து விளக்கமாக ஆராயப்பட்டன. உள்நாட்டுமந்திரி டாக்டர் டபிள்யூ தஹநாயக்கா, வர்த்தகமந்திரி திரு பீரிஸ், உணவுமந்திரி திரு. எம். டி. பண்டா ஆகியோரும், நாட்டின் அரசாங்க அதிபர்களும் கலந்துகொண்ட இந்த மகாநாட்டில், வாழ்க்கைச் செலவைக் குறைக்கும் முதல் நடவடிக்கையாக ஒவ்வொரு காரியாதிகாரி பிரிவிலும் இரண்டு சபைகள் நிறுவப்படவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

தேசிய அரசாங்கம் பதவியேற்றபின்னர் இப்படியான தொரு மகாநாடு நடைபெறுவது இதுவே முதற்தடவையாகும்.

இன்றுகாலை நடைபெற்ற அரசாங்க அதிபர்களினது மகாநாட்டை உள்நாட்டு மந்திரி டாக்டர் டபிள்யூ தஹநாயக்கா ஆரம்பித்து வைத்தார்.

அவர் அப்பொழுது பேசுகையில்; நாட்டின் முக்கிய பிரச்னையான வாழ்க்கைச் செலவைக்குறைக்க அரசாங்கம் மேற்கொள்ளும் திட்டத்தை வெற்றிகரமாக நடத்துவதற்கு அரசாங்க அதிபர்களினால் தான் முடியுமெனறும் அரசாங்கத்தின் தீர்மானங்களை செயற்படுத்த அரசாங்க அதிபர்கள் முழுமனதுடன் ஒத்துழைக்க வேண்டும் என்றும் கூறினர்.

### கண்காணிப்பு சபைகள்

வர்த்தக மந்திரி திரு. பீரிஸ் பேசுகையில்; வியாபாரிகளினது பதுக்கல் மற்றும் ஊழல்களிலிருந்து பாவனையாளர்களை பாதுகாக்க காரியாதிகாரிகள் பிரிவுகளில் கண்காணிப்புச்சபைகள் நிறுவப்படவேண்டும் என்றும் உணவுப்பொருட்களை பதுக்கல் செய்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டுமென்றும் கூறினர்.

விலைக்கட்டுப்பாடுகளை அமுல் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்றும் வர்த்தகமந்திரி குறிப்பிட்டார்,

### உபஉணவுப்பொருள்கள்

உணவு மந்திரி திரு எம் பி பண்டா பேசுகையில் உணவுப் பொருள்களின் உற்பத்தியை அதிகரிக்க இளைஞர்கள் குடியேற்றத்திட்டங்கள் நிறுவப்படவேண்டுமென்றும் உபஉணவுப் பொருள்களின் உற்பத்தி இங்கு மிகவும் குறைவாகக் காணப்படுகிறதென்றும் கூறினர்.

உப-உணவுப்பொருள்களின் உற்பத்தியில் எமது நாடு பின்தங்கியதாகக் காணப்படுகிறது. கடந்த வருடத்தில் நாலு கோடியே நாற்பது லட்சம் ரூபா இதற்காகச் செலவிடப்பட்டதென்றும் கூறினர்.

### சில தீர்மானங்கள்

அரசாங்க அதிபர்களினது மகாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட சில முக்கிய தீர்மானங்கள் வருமாறு:

வாழ்க்கைச்செலவைக் குறைக்க நாட்டின் ஒவ்வொரு காரியாதிகாரி பிரிவிலும் (1) மக்கள் சபை, (2) உணவு உற்பத்தி சபை என்று இரு சபைகள் நிறுவுதல். வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கான வழிவகைகளை மக்கள் சபை ஆராயவேண்டும் என்றும் உணவுப்பொருள்களின் உத்தரவாதத் திட்டங்களை அமுல்நடத்தவும் இப்படியான திட்டங்களைத் தயாரிக்கவும் உணவு உற்பத்திசபை ஈடுபடவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

காரியாதிகாரிகள் பிரிவுகளில் உத்தேச கண்காணிப்பு சபைகளை நிறுவ நடவடிக்கை எடுப்பது.

கிராம சேவகர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை விசாரணை செய்ய நடவடிக்கை எடுப்பது.

அவர்களினது இடமாற்றங்கள் குறித்து ஆராய இடமாற்ற சபைகள் நிறுவுதல்.

விலைக்கட்டுப்பாட்டை அமுல் நடத்தவேண்டும். உப-உணவுப்பொருள்கள் உற்பத்தியை அதிகரிக்க உரிய நடவடிக்கைகளை எடனடியாக அமுல்செய்வது.

# வடக்கிலும் நல்ல மழை

## கடும் வரட்சி ஓரளவு நீங்கியது

யாழ்ப்பாணம், வெள்ளி

கடந்த பல மாதகாலமாக இங்கு நிலவிய கடும் வரட்சி நேற்று முன்தினமும், நேற்றும் பெய்த பலத்த மழை காரணமாக ஓரளவு நீங்கியது.

கடந்த புதன்கிழமையிலிருந்து யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் நல்ல மழை பெய்துவருகிறது. காங்கேசன்துறை, மாவிட்டபுரம், சுன்னாகம் கோண்டாவில், சங்கானை மானிப்பாய் ஆகிய இடங்களில் நேற்று முன்தினம் இரவும், நேற்றும் பகலும் நல்ல மழை பெய்தது.

யாழ்ப்பாணநகரில் நேற்றுக் காலை மப்பும் மந்தாரமுமாக இருந்து பகல் நல்ல மழை பெய்தது. இரவிலும் தொடர்ந்து மழை பெய்தது.

### சாவகச்சேரியில்

சாவகச்சேரியில் கடந்த இரு தினங்களாகப் பலத்த மழை பெய்து வருகிறது. இதன் பலனாகக் கடந்த பல மாதகாலமாக இங்கு நிலவிய கடுமையான வரட்சி நீங்கியது.

### வவனியாவில்

வவனியா, கிளிநொச்சி, ஆனையிறவு, பளை ஆகிய இடங்களிலும் நேற்றும் பலத்த மழை பெய்தது.

மதுகமவில் 7.05 அங்குல மழை பெய்துள்ளது இங்கு அதிக அளவு மழை பெய்ததாக கணிக்கப்பட்டுள்ளது. மற்ற இடங்களில் பெய்த மழையின் அளவு வருமாறு: கெபோட: 6.07 அங்குலம், கட்டுநாயகா: 5.68 அங்குலம், களுத்துறை: 5.45 அங்குலம், இரத்மலானை: 4.10 அங்குலம், வத்தேகொட: 2.48 அங்குலம், ஹட்டன்: 2,38 அங்குலம், கொழும்பு: 2.30 அங்குலம், மரதங்கதாவெல: 2.27 அங்குலம், வவனியா: 2,08 அங்குலம், வத்தவல: 1.98 அங்குலம், கெபிட்டிகொலாவ: 1,60 அங்குலம், அநுராதபுரம்: 1.44 அங்குலம், கொச்சியகம: 1.28 அங்குலம், மிகிந்தலை: 1.22 அங்குலம். ஹிங்குராகொட: 1,04 அங்குலம்.

## 10, 800 பேர் கொல்லப்பட்டனர்

வாஷிங்டன், ஆக 12

வியட்னாம் சண்டையில் இவ்வாண்டுமுதல் மூன்று மாதங்களில் 75,000 வியட்காங்கியர் கொல்லப்பட்டனர் 3000 தென்வியட்னாமியரும், 800 அமெரிக்கரும் கொல்லப்பட்டனர் இந்த விபரங்களை அமெரிக்க பாதுகாப்பு மந்திரி திரு, மக்னமாரா அறிவித்தார்

## அமெரிக்க ஜெட் போர்விமானம் ஏவுகணையால் சுட்டுவீழ்த்தப்பட்டது

ஹனோய், ஆக. 12

வடக்கு வியட்னாம் மீது பறந்துசென்ற அமெரிக்க கடற்படைப் போர்விமானம் ஒன்று இன்று ஏவுகணை ஒன்றினால் சுட்டு வீழ்த்தப்பட்டது,

நிலத்திலிருந்து வானத்துக்கு அனுப்பப்பட்ட ஏவுகணை ஒன்று அமெரிக்க ஜெட் போர்விமானத்தை அழித்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது.

## யாழ்ப்பாணத்தில் தப்லீக் மகாநாடு

யாழ்ப்பாணம், வெள்ளி

அடுத்தவார இறுதியில் யாழ்ப்பாணத்தில் தப்லீக் மகாநாடு நடைபெறவிருக்கிறது,

யாழ்ப்பாணம் முஸ்லிம் பகுதியிலிருக்கும் பெரிய ஜும்ஆ பெரியபள்ளி வாசலில் இம்மாதம் இருபத்தியோராம் இருபத்திரண்டாம் திகதிகளில் மகாநாடு நடைபெறும் என அறிவிக்கப்படுகிறது.

## கடும் மழையில் விளையாட்டுப் போட்டி!

மீசாலை, வெள்ளி

மீசாலை விக்கினேஸ்வர வித்தியாலய வருடாந்த விளையாட்டுப் போட்டி, கடுமையாக மழை பெய்தபொழுதிலும் தொடர்ந்து நடைபெற்றது.

சிவன், கணேசன், அம்பிகை, முருகன் என நிறுவப்பட்ட நாலு இல்லங்களாக மாணவர்கள் பிரிந்து விளையாடினர்கள்.

சாவகச்சேரி எம், பி. திரு வி. என். நவரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். தென்மராட்சி காரியாதிகாரி திரு. இ. சிதம்பரப்பிள்ளை பாடசாலை கொடியை ஏற்றிவைத்தார், பாடசாலை அதிபர் பண்டிதர் சி. கா. தம்பையா பரிசில்களை வழங்கினர்.

சிவன் இல்லம் 108 புள்ளிகளைப் பெற்று முதலாவது இடத்தையும் முருகன், கணேசன், அம்பிகை இல்லங்கள் இரண்டாம், மூன்றும், நான்காம் இடங்களையும் பெற்றது.

## போக்குவரத்து தாமதம்

வவனியா, வெள்ளி

அநுராதபுரத்திலிருந்து மாலை 5-30 மணிக்கு புறப்படும் "மெயில்" புகைவண்டி வவனியாவிற்கு இரவு 6-45க்கு வந்து பெட்டிகள் மாற்றிக்கொண்டிருக்கும் சமயம் ஒரு பெட்டி பாதையை விட்டு விலகியது. இதனால் நேற்றிரவு புகைவண்டிப் போக்குவரத்து பஸ் போக்குவரத்தும் தடைபட்டது. இச்சம்பவம் பஸ் வண்டிகள் செல்லும் புகையிரதக் கடவையில் நடைபெற்றதன் காரணமாகவே பஸ் போக்குவரத்து தடைப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

# 'சிறுபான்மையினரின் உரிமை தேசியஅரசாங்கம் பாதுகாக்கும்'

## வவனியா எம். பி. பேச்சு

வவனியா, வியாழன்

சிறுபான்மைமக்களின் ஆதரவுடன் அமைக்கப்பட்ட அரசாங்கம், நமது நாட்டின் முன்னேற்றதுக்கும் நாட்டுமக்களின் உரிமைகளுக்கும் வேலையில்லாத்திண்டாட்டம், வறுமை ஆகிய வற்றைப்போக்கவும் நல்ல திட்டங்களை வகுத்து அதன்படி நாட்டுமக்கள் அனைவரையும் சரிநிகர்சமானமாக நடத்தும் என்பதற்கு ஐயமில்லை" இவ்வாறு வவனியா எம் பி திரு டி சிவசிதம்பரம் வவனியா றம்பைக்குளம் புனித அந்தோனியார் கன்னியர் மடப் பாடசாலை விழாவில் பிரதமவிருந்தினராக கலந்து பேசுகையில் குறிப்பிட்டார்

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது-

நமது நாட்டின்முன்னேற்றத்துக்கு சிறுபான்மை சமூகத்தினரது மனப்பூர்வமான ஒத்துழைப்பு தவிர்க்கமுடியாதென்றநிலை இப்போது ஏற்பட்டுள்ளது

மிஷனரிகள் இலங்கையில் சிறுபான்மையினராயிருப்பினும் கல்வித்துறையில் அவர்களது சேவை முக்கியத்துவம் வாய்ந்தது என நமது தேசிய அரசாங்கம் கண்டுள்ளது எனவே மிஷனரிமார்களதுபொறுப்பில் இருந்து வந்த பாடசாலைகட்கு விரைவில் தேசியஅரசாங்கத்தினால் சுதந்திரம்அளிக்கப்படும் என்பதே எனது நம்பிக்கை

பாடசாலை மாணவிகளால் செய்யப்பட்ட கைப்பணிப் பொருட்களைக்கொண்ட ஒரு பொருட்காட்சியும் மேற்படிவிழாவில் கண்காட்சிக்கு வைக்கப்பட்டது

இவ்விழாவவனியா மாவட்ட கல்விஅதிகாரி திரு ஞானசேகரம் தலைமையில நடைபெற்றது அவர் தமது தலைமை உரையில், மேற்படிபாடசாலையின் சிறப்புபற்றிஎடுத்துரைத்தார்

# "தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தமிழ் பௌத்த பாடசாலை"

## கட்டித்தருவதாக வண: வஜ்ஜிரராம கரவெட்டியில் வாக்குறுதி

உடுப்பிட்டி, வெள்ளி

"வடமாகாணத்தில் இன்னும் தீண்டாமை தாண்டவமாடுவதை இங்கு வந்ததும் நான்கண்டுகொண்டேன், இங்கு உயர்சாதி மக்களால் தாழ்த்தப்பட்ட மக்கள் படும் கஷ்டங்களை நான் நேரில் கண்டறிந்தேன், ஏழை மக்கள் கந்தல் உடைகளுடன் குடிசையில் வாழ்வதை என்னால் சகிக்க முடியாமலிருக்கிறது நான் பிரதமருக்கும் யாழ்ப்பாண அரசாங்க அதிபருக்கும் இது பற்றி எடுத்துச் சொல்லி ஆவன செய்ய முயற்சிப்பேன்"

இவ்வாறு கரவெட்டி கனுவில் சனசமூகநிலையத்தில்நடைபெற்ற அகில இலங்கைப் பௌத்த சங்கக்கூட்டத்தில் பிரதம விருந்தினராகக்கலந்துகொண்ட பம்பலப்பிட்டி பிரதம குரு வண ஸ்ரீவஜ்ரராம தேரோ பேசுகையில் கூறினர்

திரு வ தங்கமணி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் ஸ்ரீவஜ்ரராம தேரோ தொடர்ந்து கூறியதாவது:-

காணிகள் வீடுகள் இல்லாத மக்களுக்கு அரசாங்கம் புதிய வீடமைப்புத் திட்டமொன்றை ஏற்படுத்தியுள்ளது. அத்திட்டத்தின்படி இந்த ஏழைமக்களுக்கும் காணி, வீட்டு வசதி யளிக்கப்படவேண்டும், கனுவில் பகுதியிலுள்ள பிள்ளைகள் எல்லோரும் பாடசாலைக்குச் செல்வதில்லை என்பதையும் அவர்களது தாழ்ந்த கல்வித்தரத்தையும் அதனால் வாடிய பிஞ்சுமுகங்களையும் நான் நேரில் கண்டேன, இங்குள்ள தாழ்த்தப்பட்டபிள்ளைகள்படிப்பதற்கு ஒரு தமிழ்-பௌத்த பாடசாலை கட்டித்தருவதற்கு முயற்சிப்பேன், இப்பொழுது இங்கு உதயமாகிக்கொண்டிருக்கும் கன்பொல்லை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மிகவும் அவசியமானது, இதனை உடனடியாகப் பதிவுசெய்வதற்கு நான் கூட்டுறவு ஆணையாளருடன் தொடர்புகொள்கிறேன், எந்தவகையிலும் தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்தையே நான் விரும்புகிறேன்

சிங்கள பௌத்த சங்கக் காரியதரிசி திரு சில்வா பேசுகையில் குறிப்பிட்டதாவது:

எமது பௌத்த சங்கத்தைச் சேர்ந்த சிங்கள வாலிபர்கள் இங்கு வந்து சிரமதான இயக்கத்தின் மூலம் நல்ல வீடுகள் கிணறுகள், குளங்கள் முதலியனவற்றைத் திருத்தியமைப்பதற்கு உதவி செய்வோம் இந்த உடுப்பிட்டித் தொகுதிக்கு மூன்று மந்திரிகள் அழைக்கப்பட்டும் இப்பகுதி மக்களின் குறைகளை மந்திரிகள் நேரில் பார்க்கும்படியாக வைக்கத் தவறிவிட்டு மிகவும் வருந்துகிறேன், கனுவில் பகுதியிலுள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் யாவரும் வெகு விரைவில் முன்னேறிப் பண்பட்ட மக்களாக வாழவேண்டும் என்று விரும்புகிறேன் எத்தக் கஷ்டமான சந்தர்ப்பங்களிலும் எமது சங்கத்தின் ஆதரவை நீங்கள் தாராளமாகக் கோரலாம் ஏழைகள், தாழ்த்தப்பட்டுத் தீண்டத்தகாதவர்கள் என்று எவருமே இந்த நாட்டில் இருக்கக்கூடாது"

கனுவில் சனசமூகநிலயச் செயலாளர் திரு க. இராசரத்தினம் பௌத்தசங்கப் பிரதிநிதிகளை ஒவ்வொரு வீடாகக் கூட்டிச்சென்று அங்கு ஏழை மக்கள் படும் கஷ்டங்களை நேரில் காண்பித்தார்

காங்கேசன்துறை உதவி பொலிஸ் சுப்ரிண்டனும் பருத்தித்துறை பொலி உத்தியோகத்தர்களும் கூட்டத்திற்குச் சமூகமளித்திருந்தனர் திரு க இராசத்தினம் நன்றி கூறினர் கனுவில் பகுதி மக்கள் பௌத்தசங்கப் பிரதிநிதிகளை வணங்கி வழியனுப்பினா

## கடலில்கண்டெடுத்த மயில்

முல்லைத்தீவு, வெள்ளி

முல்லைத்தீவுக் கடலில் ஓர் அழகான மயிலின் விக்கிரகம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இந்த விக்கிரகம் கல்லினால் செய்யப்பட்டு சிறந்த அழகான வேலைகளுடன் காணப்படுகின்றது.

பாம்பைத் தன் காலின்கீழ் வைத்துக் கொண்டு அழகாகப் பார்ப்போரைப் பரவசமூட்டும் இந்த மயில்வாகனத்தில ஒரே ஒரு குறைதான் உண்டு. அதாவது உடலுக்குப் பிரதானமான தலையில்லை. தலை உடைந்து காணபபடுகின்றது: இந்த மயில்வாகனத்தைஏராளமானவர்கூட்டம் கூட்டமாகச்சென்று தரிசித்துவருகின்றனர்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org